Part-time Craft Instructors

* 129 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have ordered the payment of Rs. 60 as fixed pay instead of Rs. 30 to part-time Craft Instructor through G.O. Ms. No. 1457, Education, dated 6th October 1971.

(b) whether it is a fact that such order has not been implemented with regard to part-time Craft Instructors in Higher Elementary Schools; and

(c) if so, the reasons thereof?

கைவினைப் பணிப் பகுதி நேர ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கைவினைப் பணிப் பகுதி நேர ஆசிரியர்களுக்கு வரையறுத்த சம்பளம் ரூ. 30 என்பதற்குப் பதிலாக ரூ. 60 கொடுக்க 1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ம் நாள் நாளிட்ட 1457-ம் எண் ஆணையில் அரசு கட்டளை பிறப்பித்துள்ளதா?

(இ) உயர் தொடக்கப் பள்ளிகளிலுள்ள கைவினைப் பணிப் பகுதி நேர ஆசிரியர்களுக்கு அத்தகைய ஆணை செயல் படுத்தப்படவில்லை யென்பது உண்மையா ?

(உ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ). இவ்விஞவிற்கு இடமில்லை.

Clash between the students of Rajah Serfoji (Government) College, Thanjavur.

* 130 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to State—

(a) whether it is a fact that there was a clash between the students of Raja Serfoji (Government) College, Thanjavur, within

the College Campus on 2nd February 1972 and that a student received stab injuries consequent on the same;

(b) if so, the reason for the same; and

(c) the action proposed to be taken by the Government to avert such incidents in future?

தஞ்சாவூர், ராஜா சரபோஜி (அரசு) கல்லூரி மாணவர்களுக்கிடையே கைகலப்பு.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் ராஜா சரபோஜி (அரசு) கல்லூரி வளவுக்குள் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ம் நாளன்று அக் கல்லூரி மாணவர்களுக்கிடையே கை கலப்பு ஏற்பட்டது உண்மையா? இதன் விளைவாக ஒரு மாணவருக்கு படுகாயம் ஏற்பட்டதா?

(இ) ஆமெனில், இதற்கான காரணம் யாது?

(உ) இத்தகைய கலவரங்கள் இனி ஏற்படாமல் தடுக்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மாணவர்களில் இரு சாராரிடையே இருந்த மனக்கசப்பு.

(உ) கல்லூரிக் குழு இத்தகைய சம்பவங்கள் பின்னும் நடப்பதைத் தவிர்க்க விவாதித்தது. அதன் பயனுக, 1972-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7-ம் நாளிலிருந்து கல்லூரி மீண்டும் திறக்கப் பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ஒரு மாணவியைப் பற்றிய காரணத்தால், சண்டை சச்சரவு ஏற்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா? இது சம்பந்தமாக போலீஸ் வழக்குப் பதிவு செய்யப்பட்டதும், பிறகு அது கைவிடப்பட்டதும் ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாணவர்களில் இரு சாராருக்கிடையே பரீட்சை நடந்து முடிகின்ற தருவாயில், தகராறு ஏற்பட்டது என்றும், கல்லூரி முதல்வரும்

1972 ஆகஸ்ட் 21]

பேராசிரியர்களும் முயன்று, அந்தத் தகராறு தவிர்க்கப்பட்டது என்றும், அதன் காரணமாக நான்கு நாட்கள் கல்லூரியை மூட வேண்டியதாயிற்று என்றும், சமரசம் ஏற்பட்ட பிறகு கல்லூரி திறக்கப்பட்டது என்றும்தான் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல காரணம் ஏதும் அளிக்கப் படவில்லை. வழக்குப்பற்றிய விவரம் எனக்குத் தரப்படவில்லை. தனிக் கேள்வி போட்டால், வழக்கு பற்றிய விவரங்கள் அளிக்கப் படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இதைப்பற்றி நேரடியாக எனக்குத் தெரியும். ஒரு மாணவியிடத்திலே மாணவர்கள் குறும்பு செய்ததன் காரணத்தால், வம்பு ஏற்பட்டு, அதன் பிறகு ஒரு மாணவரை இன்னொருவர் கத்தியால் குத்தி, போலீஸ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் இங்கே தரப்பட்டுள்ள விளக்கங்கள் இதற்குச் சம்பந்தமில்லாத மாதிரி அபிப்பிராயங்களை உருவாக்கு கின்றன. தகராறு ஏற்பட்ட காரணத்தால், போலீஸ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதற்குப் பிறகு வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இது போன்ற காரியங்கள் இனி நடைபெறுமல் இருபதற்காகவேணும் அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரு சாராரிடையே கலகம் மூண்டது என்று தான் விவகாரம் துவங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது இதற்கு முன்னதாக ஏற்பட்டதாக இருக்கக் கூடும். தகராறு ஏற்பட்டவுடன், பல முக்கியஸ்தர்களும், கல்லூரி முதல்வரும், பேராசிரியர்களும் உட்கார்ந்து பேசி, சுமூகமான முடிவு ஏற்படுகின்ற சூழ்நிலையில், வழக்கு வாபஸ் வாங்கப் படுகின்ற முடிவு ஏற்பட்டிருக்கக் கூடும்.

கூடுமானவரையில், இப்படிப்பட்ட சமயங்களில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனாலும், சில சமயங்களில், இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகளே கூட மாணவர்களின் கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்துவிடுகிறது. ஆகவே, சூழ்நிலையை ஒட்டித் தான் முடிவு ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். கூடுமானவரையில் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படாவண்ணம் தடுப்பதற்கு எவ்வளவு கடுமையாக இருக்க வேண்டுமோ அவ்வளவு கடுமையாக இருக்க வேண்டும் என்பது தான் அரசின் எண்ணம். கல்வித் துறையிலும் இப்படித் தான். எனினும், சூழ்நிலைக் காரணத்தால் சமரச அடிப்படையில் முடிவுகள் எடுக்க வேண்டியும் நேரிட்டு விடுகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.